# மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை

## வட மத்திய மாகாணம் ~ அநுராதபுரம்

இவ் அதிகார சபையின் சிவில் பொறியியல் வெற்றிடங்களுக்காக ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்வதற்கு தகைமையுள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்காக தமது விண்ணப்பங்களை 2025.05.30ம் திகதிக்கு முன்னர் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்புமாறு இத்தால் அறிவிக்கிறேன்.

**பொறியியல் (சிவில்) - IIம் தரம்**

01. **தரம் மற்றும் சம்பள அளவு** - IIம் தரம் 96,650 - 10x2,480 - 15x3,450 - 173,200 - MM 1-3 (2025) (முகாமைத்துவ சேவை சுற்று நிருப இல. 01/2025)

**வெளி விண்ணப்பதாரிகள்**

(கீழ்க்காணும் தகைமைகள் 01 அல்லது 02 அல்லது 03 அல்லது 04) குறைந்த பட்ச தகைமைகள் மற்றும் சேவையின் தேவைப்பாடுகள்

01. சிவில் பொறியியல் பாடத்துறையில் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டத்தைப் பெற்றிருத்தல்

    **மற்றும்**

    பட்டத்தைப் பெற்றுக் கொண்ட பின்பு சிவில் பொறியியல் பாடத் துறையில் பொருட்கள்/ ஆக்கம்/ நிர்மாண விடயங்கள் பற்றிய குறைந்தபட்சம் 01 வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

02. இலங்கை பொறியியல் நிறுவனத்தின் சிவில் பொறியியலாளர் பாடத் துறையுடன் சம்பந்தப்பட்ட கிட்டிய அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்

    **மற்றும்**

    தகைமைகளைப் பெற்றுக் கொண்ட பின்பு சிவில் பொறியியல் பாடத்துறையில் பொருட்கள்/ ஆக்கங்கள்/ நிர்மாண விடயங்கள் பற்றிய குறைந்தபட்சம் 01 வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

03. மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பம்/ தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் விநியோகிக்கப்படும் சிவில் பொறியியல் பாடத் துறையுடன் சம்பந்தப்பட்ட தேசிய தொழிற் தகைமை (NVQ) ஏழாம் (07) மட்டத்திற்கு குறையாத மட்டத்தில் திறன் சான்றிதழைப் பெற்றிருத்தல்

    **மற்றும்**

    தகைமைகளைப் பெற்றுக் கொண்ட பின்பு அரச, அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் குறித்த துறையில் பொறியியலாளராக குறைந்தபட்சம் ஒரு (01) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

04. பரீட்சைகள் ஆணையாளரால் நடத்தப்படும் சிவில் பொறியியல் பாடத் துறையுடன் சம்பந்தப்பட்ட அரச தொழில்நுட்ப அதிகாரிகள் பரீட்சையில் (GTO) IIIம் பகுதி சித்தியடைந்த வட மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் (வ.ம.மா.) வீசேட தரத்தில் தொழில்நுட்ப அதிகாரியாக இருத்தல்

    **அத்துடன்**

    தகைமைகள் பெற்றுக் கொண்ட பின்பு சிவில் பொறியியல் பாடத்துறையில் பொருடகள்/ஆக்கங்கள்/நிர்மாண விடயங்கள் பற்றிய குறைந்தபட்சம் ஒரு(01) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**வேறு தகைமைகள் மற்றும் நிபந்தனைகள்**

- ➢ விண்ணப்பதாரிகள் சேர்த்துக் கொள்ளும் தினத்தில் குறித்த தகைமைகளை சகல விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
- ➢ சேர்த்துக் கொள்ளும் தினத்தில் 45 வயதிற்கு குறைவாக இருத்தல் வேண்டும். தற்போது அரச அல்லது மாகாண அரச சேவைகள், அரச சார்பு அரச நிறுவனத்தில் (கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் நிறுவனம்) சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் அதி கூடிய வயதெல்லை பொருந்தாது.

5. அரச சேவை, அரச சார்பு நிறுவனங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்தை குறித்த திணைக்கள/ கூட்டுத்தாபன/ சபை தலைமையூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

- ➢ விண்ணப்பதாரிகளினால் தமது சுயதரவு அடங்கிய விண்ணப்பத்தை தயாரித்து அனுப்ப வேண்டியதுடன் தமது தகவல்களை பெற்றுக் கொள்ளக்கூடிய இருவரின் பெயர்களை குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.
- ➢ இப் பதவி ஒப்பந்த அடிப்படையில் ஆவதுடன் ஒரு வருட காலத்திற்கும் எனவே அதிகார சபையின் விருப்புக்கு இணங்க இக் காலத்தை நீடிக்கலாம் அல்லது இல்லாது விடலாம்.
- ➢ சேர்த்துக் கொள்ளும் பதவிகளின் எண்ணிக்கை 03 ஆகும்.
- ➢ இவ் ஒப்பந்த பதவிக்காக மாதாந்தம் ரூ. 92,943.00 (75,143.00 + 17,800.00) கொடுப்பனவு உட்பட அதிகார சபையினால் செலுத்தப்படும் மாதாந்த கொடுப்பனவும் செலுத்தப்படும்.
- ➢ விண்ணப்பதாரிக்கு விசேட தகைமைகள் மற்றும்/அல்லது அனுபவம் இருப்பின் அவை கவனத்திற் கொள்ளப்பட்டு மேற்படி தரத்தில் அல்லது ஏதேனும் தரத்தில் சம்பள அளவில் பொருத்தமான சம்பள அளவில் நிலை நிறுத்தப்படும்.
- ➢ நிரந்தர வெற்றிடங்களுக்காக சேர்த்துக் கொள்ளும் போது ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படும் சேவை பற்றிய செயற்பாடுகள் கவனத்திற் கொள்ளப்படும்.

நீங்கள் இப்பதவிக்காக தேர்ந்தெடுக்கப்படின் வட மத்திய மாகாணத்தின் எந்தப் பிரதேசத்திலும் உங்களது சேவையை வழங்குவதற்கு இணங்குதல் வேண்டும். சேர்த்துக் கொள்வதற்கான இறுதித் தீர்மானம் எடுத்தல் அதிகார சபையின் பொது முகாமையாளருக்கு உரித்தாகும்.

**பொது முகாமையாளர்,**
**வட மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை,**
**எச். பீ. சேமசிங்ஹ மாவத்த,**
**அநுராதபுரம்.**